NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 7 October 2021

# கொள்கை ஆய்வுக் கழகத்தின் எஸ் ஆர் நாதன் சிறப்பு ஆய்வாளர்களாக பேட்ரிக் டேனியல், நொய்லீன் ஹேய்ஸர்





முனைவர் நொய்லீன் ஹேச்ஸர், திரு பேட்ரிக் டேனியல் இருவரும் இவ்வாண்டுக்கான அதன் எஸ்ஆர் நாதன் சிறப்பு ஆய்வாளர்களாக கொள்கை ஆய்வுக் கழகம் நியமித்துள்ளது.
**கோப்புப் படங்கள்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

ஐக்கிய நாட்டு நிறுவனத்தின் முன்னாள் துணைத் தலைமைச் செயலாளரான முனைவர் நொய்லீன் ஹேச்ஸரையும் எஸ்பிஎச் மீடியா ட்டிரஸ்ட் நிறுவனத்தின் இடைக் காலத் தலைமை நிர்வாகி பேட்ரிக் டேனியலையும் எஸ்ஆர் நாதன் சிறப்பு ஆய்வாளர்களாக கொள்கை ஆய்வுக் கழகம் நியமித்திருக்கிறது.

சிங்கப்பூரின் ஆறாவது அதிபராகப் பதவி வகித்த மறைந்த திரு எஸ்ஆர் நாதன் பொதுச் சேவைக்கும் சிங்கப்பூரின் மேம்பாட்டுக்கும் ஆற்றிய பெரும்பங்கின் நினைவாக ஃபெலோஷிப் எனப்படும் இந்தச் சிறப்பு ஆய்வாளர் திட்டம் அவரது பெயரில் அமைக்கப்பட்டது. அதன் கீழ் ஒவ்வோர் ஆண்டும் ஆய்வாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

இதற்கு நிமயிக்கப்படும் பத்தாவது ஆய்வாளர் டாக்டர் ஹேய்ஸர் ஆவார். 11வது சிறப்பாய்வாளராக திரு டேனியல் இடம்பெற்றுள்ளார்.

இந்த இருவரும் அரசாங்கக் கொள்கை, ஆட்சிமுறை ஆகியவை தொடர்பாக ஆய்வு மேற்கொள்வார்கள்.

சமூக அறிவியல் ஆய்வாளரான டாக்டர் ஹேய்ஸர் ஐக்கிய நாட்டு நிறுவனத்தின் ஆசிய பசிஃபிக் வட்டாரத்துக்கான பொருளியல் சமூக ஆணையத்தின் நிர்வாகச் செயலாளராகப் பணியாற்றிய முதல் பெண்ணாவார். சென்ற 2007ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரை இவர் ஐக்கிய நாட்டு நிறுவனத்தின் துணைத் தலைமைச் செயலாளராகப் பணியாற்றினார்.

இவர் நவம்பர், டிசம்பர் மாதங்களில் பலதரப்பு ஆட்சிமுறை பற்றியும் சிங்கப்பூரின் எதிர்காலம் குறித்தும் உரைகள் ஆற்றுவார்.

செய்தித் துறையில் பழுத்த அனுபவம் கொண்ட திரு டேனியல், அரசாங்க அதிகாரியாகவும் பணியாற்றியுள்ளார். சிங்கப்பூரின் ஊடகச் சூழல் பற்றியும் அது சிங்கப்பூரர்களின் வாழ்வில் ஆற்றும் பங்கு பற்றியும் ஆய்வு செய்ய இருக்கும் அவர், அடுத்த ஆண்டு பிப்ரவரி, மார்ச் மாதங்களில் உரைகள் நிகழ்த்துவார்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.